

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று முன்தினம் (14.04.2025) சேலம் அம்பேத்கர் சர்க்கிளில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

# மன்னார்குடி தொகுதியில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தொடங்கிவைத்தார்

திருவாரூர், ஏப்16-

திராவிட நாயகர் தமிழ் நாடு அரசின் முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல் களோடு திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தூர்வாரும் பணி மற்றும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் மற்றும் கழகநிர்வாகிகள் உடனிருந்தனர்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், காஞ்சிக்குடிகாடு, மேலநாகை, கீழநாகை, சுந்தரக்கோட்டை மற்றும் இடையர்நத்தம் கிராமம் வடவாறு கிளை எண்: 01 வாயக்கால் நெடுகை 0.00 கி.மீ முதல் 11.50 கி.மீ வரை ரூ.13.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் தூர்வாரும் பணியை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தொடங்கி வைத்தார். பேரையூர், அப்பரசம் பேட்டை, காஞ்சிகுடிக்காடு, மேலநாகை, கீழநாகை, சுந்தரக்கோட்டை, இடையர்நத்தம் மற்றும் கீழநத்தம் ஆகிய கிராமங்கள் பயனடையும். 2895 ஏக்கர் பயனடையும் பாசன பகுதியாகும்.

அதனைத்தொடர்ந்து, மன்னார்குடி வட்டம், மேலவாசல் ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக்கடையினை மாண்புமிகு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், ஆய்குடி ஊராட்சியில் நபார்டு வங்கியின் மூலம் ரூ.237.45 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ளாற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட புதிய பாலத்தினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி. ராஜா அவர்கள் திறந்து வைத்தார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனச்சந்திரன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சி முன்னாள்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், சட்டத்திருத்தக் குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் சோம. செந்தமிழ் செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், நகர செயலாளர் வீரா கணேசன், நகர்மன்ற உறுப்பினர் ராஜபூபாலன், மாவட்ட மகளிரணி தலைவர் ராணி.சேகர், மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர் பகலவன் பி..ஆர். ராஜாராம், பைங்காநாடு இளையராஜா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### வீ.ஜெகதீசன் தலைமை! எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# பெரம்பலூர் மாவட்டத்தில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா!

## ‘சமத்துவ நாள்’ உறுதி மொழி ஏற்கப்பட்டது!

பெரம்பலூர், ஏப்.16-

பெரம்பலூர் மாவட்டத்தில் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக அலுவலகத்தில் அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்கப்பட்டது.

கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க,

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனையின் பேரில்,

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சமத்துவ நாளாக கொண்டாடப்பட்டது மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமையில்,சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில்,

பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அம்பேத்கர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உறுதி மொழி ஏற்கப்பட்டது.

மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன்,

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக் குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை சி.பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ண மூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன்,

ஆர்.அருண், மா.பிரபாகரன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ)அப்துல்பாரூக், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், துணை அமைப்பாளர் கோவிந்தராஜன்,

மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஆர்.சுந்தர்ராஜ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளையொட்டி மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் அவர்களது தலைமையில் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களது படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சமத்துவம் நாள் உறுதிமொழி ஏற்று, அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், துணை மேயர் ஆனந்தையா, மாநில விவசாய அணி துணை செயலாளர் அரியப்பன், மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி மற்றும் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி தெற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பி.என்.எம்.என்.கதிரவன் ஏற்பாட்டில் கருங்கல்பாளையம் பகுதி 42 வது வட்டத்திற்குட்பட்ட வளையக்கார வீதியில் இல்லந்தோறும் மாணவரணி உறுப்பினர் சேர்க்கை முகாம் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவரணி மாநில துணை செயலாளர் வீரமணி, பகுதி செயலாளர் குறிஞ்சி என்.தண்டபாணி, மாமன்ற உறுப்பினர் மேனகா நடேசன், வட்ட செயலாளர் ரகு, மாநகர மாணவரணி அமைப்பாளர் ஸ்ரீதர், துணை அமைப்பாளர்கள் தன்ராஜ், நல்ல சிவம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், கிருஷ்ணாபுரத்தில் தண்ணீர் பந்தலை, செ.நல்லதம்பி தலைமையில், வீ.ஜெகதீசன், எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், அம்பேத்கர், க.ரமேஷ், க. ராமலிங்கம், எம்.ரெங்கராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# எழும்பூரில் சமத்துவ நாள் விழா !

சென்னை, ஏப்.16-

தீண்டாமை, சாதிய இழிவு ஆகியவற்றுக்கு எதிராகவும் ஒதுக்கப்பட்ட மக்களின் உரிமை, ஒடுக்கப்பட்ட மக்களின் சமத்துவத்திற்காகவும் போராடிய அண்ணல் டாக்டர் அம்பேத்கரின் 135வது பிறந்த நாளை, “சமத்துவ நாள்” உறுதி மொழி ஏற்றுக் கொண்டாடுமாறு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருப்பதற்கு இணங்க, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் நான்கு இடங்களில் சமத்துவ நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

108 ‘அ’ வட்டம், சேத்துப்பட்டு, அம்பேத்கர் திடல் அருகில்; 108வது வட்டம், சேத்துப்பட்டு, வைத்தியநாதன் சாலை; 99 ‘அ’ வட்டம், பிரிக்ளின் சாலை, திடீர் நகர் அருகில், 77 வது வட்டம், புளியந்தோப்பு, டிமலஸ் சாலை ஆகிய நான்கு இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளில் ஏராளமான பகுதி மக்களும் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் பங்கேற்று சமத்துவ நாள் உறுதி மொழியை ஏற்றனர். மேலும், இந்நான்கு இடங்களிலும் 1,500 பேருக்கு இனிப்புடன் கூடிய அறுசுவை மதியை உணவைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர்கள் வெ.மருதன், விஸ்வநாதன்; மாவட்டப் பிரதி நிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாரன்; 108 ‘அ’ வட்ட இளைஞரணி அமைப்பாளர் சதீஷ், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் ஜெ.இந்திரா காந்தி, 77 ‘அ’ வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, பகுதிப் பிரதிநிதி வா.சிவகுமார், வட்டச் செயற்குழு உறுப்பினர் பிரவீன்குமார், பாக முகவர்கள் பா.ஆனந்த், செந்தில், கவிதா, கார்த்திகேயன் மற்றும் மு. வினோத், எம்.ரமேஷ், ஆர். வேலு, பத்மநாபன், சிவா, சிம்பு எனும் பிரதாப், ஐசக், யாகப், யூசுப், விஜயகுமார், இஸ்ரேல், நாகய்யா, பாண்டியன், கோவிந்தன், எழும்பூர் எம்.கணேசன், ஏழுமலை, முனுசாமி, எட்வின், சீனிவாசன், புல்லாபுரம் பிரசாத், கோமகன், முத்து, கே.பி.பார்க் சதீஷ், நாகராஜ், இரவி, ஏழுமலை, எழிலரசி உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

# அம்பேத்கர் பிறந்தநாள் விழா!



வாழப்பாடியில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மலர் தூவி மரியாதை செலுத்தி சமத்துவ நாள் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வில் கருணாநிதி, சுரேஷ்குமார், சின்னதுரை, மலையரசன் எம்.பி., ஏ.ஏ.ஆறுமுகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் “சமத்துவ நாள்” உறுதிமொழி ஏற்பு நிகழ்வு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, எம்.இராமசந்திரன், து. செல்வம், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, சி.இறைவன், மேயர் சண்.இராமநாதன், மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் அண்ணல் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்றனர். இந்நிகழ்ச்சியில் வெற்றிச்செல்வன், நாகராஜ், வெங்கடேசன், சீனிவாசன், கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், கதிரவன், செந்தில், கிருபாகரன், பாலன், நாகராசன், அஸ்லாம், கோவிந்தன், தனசேகரன், மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், குண.வசந்தரசு, ரஜினி செல்வம், எக்கூர் செல்வம் , குமரேசன் தம்பிதுரை, வெங்கடப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர் .



திருச்சியில் அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு, அம்பேத்கர் சிலைக்கு அமைச்சர் கே.என்.நேரு வழிகாட்டுதலில் படி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மேயர் அன்பழகன் ஆகியோர் தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில் பழனியாண்டி எம்.எல்.ஏ., மோகன்தாஸ், துர்கா தேவி கலைச்செல்வி, புஷ்பராஜ் கவிதா, கவிதா, அக்பர் பாய், மனோஜ், கருத்து கதிரேசன், பாலமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் தலைமையில் அண்ணல் அம்பேத்கரின் 135 ஆவது பிறந்தநாளையொட்டி சமத்துவ நாள் உறுதிமொழியை ஏற்று அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாளையொட்டி தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார் தொடர்ந்து அவரது தலைமையில் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் அண்ணல் அம்பேத்கர் உருவபடத்திற்கு மாலை அணிவித்து சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. உடன் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி, நகர செயலாளர் நாட்டான். மாது, மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.